செ.வெ.எண்:21/2019 நாள்:09.10.2019

# பத்திரிக்கைச் செய்தி

சிவகங்கை மாவட்டத்திற்குட்பட்ட வாக்காளர்கள் வாக்காளர் பட்டியலில் உள்ள பதிவுகளை சரிபார்த்துக் கொள்ள 01.09.2019 முதல் 30.09.2019 வரை ஏற்கனவே அவகாசம் வழங்கப்பட்டிருந்தது, தற்போது இதற்கான அவகாசம் மேலும் 15 (பதினைந்து) தினங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.எனவே, இப்பணிக்கு பொதுமக்கள் தங்களது வாக்காளர் பட்டியலில் உள்ள பதிவினை சரிபார்க்கவும் மற்றும் விவரங்களை உறுதி செய்து கொள்ளவும் குடும்பஅட்டை, ஆதார் அட்டை மற்றும் தேர்தல் ஆணையத்தால் அங்கிகரிக்கப்பட்ட இதர சான்றுகளில் ஏதேனும் ஒன்றை கொண்டு வாக்குச்சாவடி நிலைஅலுவலர் / வட்டாட்சியர் அலுவலகத்தின் மூலமும் அல்லது இதற்கென்று அறிமுகப்படுத்தப்பட்ட செயலியின் மூலமும் சரிபார்த்துக் கொள்ளலாம். மேற்படி வாய்ப்பினை பயன்படுத்தி கொண்டு வாக்காளர் பட்டியலினை செம்மைப்படுத்திட உதவிடுமாறு சிவகங்கை, மாவட்டஆட்சியர் திரு.ஜெ.ஜெயகாந்தன்,இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

**::வெளியீடு::**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**சிவகங்கை.**